குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 149–2022

அ.சா. **10**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. மணிகண்டன்<br>( SSI of Police Bagalur PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. கிருஷ்ணன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 48 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 18.05.2026**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாகலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். பாகலூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 287/2021 வழக்கு CC.No. 149/2022 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும் இவ்வழக்கில் நான்

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.08.2021ம் தேதி பாகலூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் செல்வம் நிலையப்பொறுப்பில் இருந்த போது ஹரிஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண் 287/2021 இ.த.ச. பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் கோப்பை புலன் விசாரானைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் அதே நாள் காலை 08.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சதீஷ் மற்றும் முருகேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் பார்வைிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே நாள் கர்நாடகா மாநிலம் பீதுராஹள்ளி அருகே உள்ள East Point College of Medical Science and research center என்ற மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அனில்குமார் இறந்த தகவலை பெற்று வழக்கின் சட்டப்பிரிவை 279, 337, 304 (A) இதச வின் கீழ் மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தார். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** East Point College of Medical Science and research center அந்த மருத்துவமனையில் இவ்வழக்கில் இறந்த அனில்குமார் என்பவரின் உடலின் மீது பஞ்சாய்த்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் ஹரிஷ், ஸ்ரீனிவாஸ், பஞ்சாயத்தார் சாட்சகிள் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் கோப்பைதொடர் புலன்

விசாரனைக்கு எடுத்துக்கொண்ட பாஸ்கர் மற்றும் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் ரவிந்திரகுமார் என்பவரை விசாரித்து பெறப்பட்ட **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் காயம் பட்ட சாட்சி ஸ்ரீனிவாஸ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மங்கயர்கரசி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கு விபத்தில் தொடர்புடைய வாகனங்களை ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பித்த மோட்டார் வாகன ஆய்வாளர் மணிமாறன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ஆய்வறிக்கையை பெற்றார். KA 53 EZ 9504 என்ற பதிவுவெண் கொண்ட Honda Dio இருச்சக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை **அ.சா.ஆ.9 ஆகவும்,** KA 59 1010 என்ற பதிவுவெண் கொண்ட Bharat Bens டிப்பர் லாரி வாகனத்தின் ஆய்வறிக்கை **அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** 25.08.2021ம் காலை 10.00 மணிக்கு பாகலூர் காவல் நிலையம் முன்பு எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்கநிலைய பிணையில் விடுவித்தார். பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த தலைமை காவலர் பாஸ்கர், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் செல்வம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும், ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு விபத்தானது பேரிகை – பாகலூர் சாலையில் நடைப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி சாலை கிழக்கு – மேற்க்காக

அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கில் இறந்து போன நபர் பேரிகையில் இருந்து பாகலூர் நோக்கி சென்றுள்ளார் என்றால் சரிதான். அவருக்கு எதிரே பாகலூரில் இருந்து பேரிகை நோக்கி டிப்பர் லாரி சென்றது என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்தில் சாலையில் வரும் நபர் இடது புற ஓரமாக வர வேண்டும் என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைப்படத்தின் படி வழக்கு விபத்தானது பேரிகை – பாகலுர் சாலையில் சாலையின் மையப்பகுதியின் வலது புறமாக நடைப்பெற்றது என்று குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரைப்படத்தின் படி பேரிகை – பாகலுர் சாலையில் வலது புறமாக இருச்சக்கர வாகனம் முந்தி சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்த நபர் இருச்சக்கர வாகனத்தில் அவருக்கு முன்னே சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயன்ற போது அவருடைய இருச்சக்கர வாகனம் டிப்பர் லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி முறையான விசாரணை மேற்கொண்டு இருந்தால் டிப்பர் லாரி மீது தவறு இல்லை என்பது தெரிந்து இருக்கும் என்றால் சரியல்ல. வழக்கு விபத்து எதிரியால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**